TAMILTH Salem 1 Regional_02 Ramesh R 222721 HT166128



## வியர்க்குதே

**வீரபாண்டி**

- சேலத்தை அடுத்த வீரபாண்டி துணை மின் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. எனவே, ஆட்டையாம்பட்டி, வீரபாண்டி, பெத்தாம்பட்டி, பாலம்பட்டி, ராஜாபாளையம், எஸ்.பாப்பாரப்பட்டி, சென்னகிரி, ஏரிக்காடு, பைரோஜி, உத்தமசோழபுரம், அரியானூர், சீரகாப்பாடி, சித்தனேரி உள்ளிட்ட இடங்களில் இன்று (9-ம் தேதி) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின் விநியோகம் இருக்காது.

**வேம்படிதாளம்**

- சேலத்தை அடுத்த வேம்படிதாளம் துணை மின் நிலையத்தின் இளம்பிள்ளை டவுன் மின் பாதை, கே.கே.நகர் மின் பாதை ஆகியவற்றில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. எனவே, இளம்பிள்ளை, நடுவனேரி, சந்தைப்பேட்டை, திருவள்ளுவர் நகர், மாரியம்மன் கோயில், பாட்டப்பன் கோயில், சவுண்டம்மன் கோயில், காடையாம்பட்டி, கே.கே.நகர், மெய்யனூர், காந்திநகர், புவனகணபதி கோயில், தப்பக்குட்டை, நடுவனேரி, உள்ளிட்ட பகுதிகளில் இன்று (9-ம் தேதி) காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது, என சேலம் தெற்கு கோட்ட மின் வாரிய செயற்பொறியாளர் அன்பரசன் தெரிவித்துள்ளார்.

**குமாரபாளையம்**

- குமாரபாளையம் துணை மின் நிலையத்தில் இன்று (9-ம் தேதி) மாதாந்திரப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. எனவே, இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை குமாரபாளையம் நகரம், கோட்டைமேடு, மேட்டுக்கடை, கத்தேரி, சத்யா நகர், வேமன் சாமியம்பாளையம், டி.வி.நகர், சடையம்பாளையம், தட்டான்குட்டை, எதிர்மேடு, மற்றும் கத்தேரி, சாமியம்பாளையம், தொட்டிபாளையம், கொடாரபாளையம் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் நிறுத்தம் செய்யப்படும் என பள்ளிபாளையம் செயற்பொறியாளர் கோபால் தெரிவித்துள்ளார்.





↑ சேலம் மாநகராட்சி தொங்கும் பூங்கா வளாகத்தில் உள்ள பல்நோக்கு அரங்கில் நடந்த விழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடனுக்கான காசோலையை ஆட்சியர் பிருந்தா தேவி வழங்கினார். உடன் மேயர் ராமச்சந்திரன், எம்எல்ஏக்கள் ராஜேந்திரன், அருள், சதாசிவம் உள்ளிட்டோர். (அடுத்த படம்) நாமக்கல் மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு நலத்திட்ட உதவிகளை எம்பி கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் வழங்கினார். அருகில் ஆட்சியர் ச.உமா, எம்எல்ஏ கு.பொன்னுசாமி.

# பெண்கள் முன்னேற்றம்தான் திராவிட மாடல் அரசின் நோக்கம்

### ● ஈரோட்டில் அமைச்சர் உதயநிதி கருத்து

● **ஈரோடு / சேலம் / நாமக்கல்**

பெண்கள் முன்னேற்றம் தான் திராவிட மாடல் அரசின் நோக்கமாகும், என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

ஈரோட்டில் நேற்று நடந்த அரசு விழாவில், 2,337 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.100.34 கோடி கடன், 129.92 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள் தொடக்கம் மற்றும் ரூ.70.56 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

தற்போதைய ஆட்சியில் 12 லட்சத்து 25 ஆயிரத்து 803 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.69 ஆயிரத்து 54 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் ரூ.30 ஆயிரம் கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. கடந்த 2016-ம் ஆண்டு முதல் தமிழகத்திடமிருந்து ரூ.6 லட்சம் கோடி வரியை மத்திய அரசு பெற்றுள்ளது. ஆனால், ரூ.2.50 லட்சம் கோடி மட்டுமே திருப்பி வழங்கியுள்ளது. இவ்வளவு நிதி நெருக்கடியிலும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு திராவிட மாடல் அரசு தாராளமாக செலவிட்டு வருகிறது. பெண்கள் முன்னேற்றம் தான் திராவிட மாடல் அரசின் நோக்கமாகும். மகளிர் சுய உதவிக்குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்ய பூமாலை வணிக வளாகம் மற்றும் ஆன்லைன் மூலம் விற்பனை செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. இத்துடன், மகளிர் சுய உதவிக்குழுக்கள் தங்கள் பொருட்களை விற்பனை செய்ய, ரூ 3.20 கோடி மதிப்பீட்டில் 100 மதி எக்ஸ்பிரஸ் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் பேசினார்.





↑ ஈரோட்டில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான நலத்திட்ட உதவி வழங்கும் விழாவில், மதி எக்ஸ்பிரஸ் வாகனத்திற்கான சாவியை, பயனாளிகளிடம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

நிகழ்ச்சியில், வீட்டுவசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் திவ்யதர்ஷினி, ஈரோடு ஆட்சியர் ராஜ கோபால் சுன்கரா, மேயர் சு.நாகரத்தினம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சேலம்**

சேலம் மாநகராட்சி தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு கடனுதவி, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. ஆட்சியர் பிருந்தாதேவி தலைமை வகித்தார். இதில் 18,216 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.96.84 கோடி வங்கிக் கடனுதவி, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

விழாவில் அவர் பேசியதாவது: மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளில் 13,799 குழுக்கள், நகரப் பகுதிகளில் 7,083 குழுக்கள் என மொத்தம் 2,55,943 மகளிரைக் கொண்ட 20,882 குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் ரூ.1,124 கோடி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, இதுவரை ரூ.1,109 கோடி கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக ரூ.93.55 கோடி வங்கிக் கடனுதவியும், சுழல் நிதி, சமுதாய முதலீட்டு நிதி மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ரூ.3.29 கோடி என மொத்தம் ரூ.96.84 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,518 குழுக்களைச் சார்ந்த 18,216 மகளிர் பயன்பெறுகின்றனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில், மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன், ஆணையர் பாலச்சந்தர், எம்எல்ஏக்கள் ராஜேந்திரன், அருள், சதாசிவம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**நாமக்கல்**

நாமக்கல் மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வங்கிக் கடன் உதவி வழங்கும் முகாம் நாமக்கல்லில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் உமா தலைமை வகித்தார். எம்பி கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் பங்கேற்று 939 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 11,592 மகளிருக்கு ரூ.68.37 கோடி வங்கி கடனுதவி வழங்கினார். முன்னதாக மாற்றுத்திறனாளிகளுக்கான சமூக தரவுகள் கணக்கெடுப்பு கையெழுத்து இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டன.

சேந்தமங்கலம் எம்எல்ஏ பொன்னுசாமி, நாமக்கல் நகராட்சித் தலைவர் து.கலாநிதி, துணைத் தலைவர் செ.பூபதி, மாவட்ட இயக்க மேலாண்மை அலகு மகளிர் திட்ட இயக்குநர் செல்வராசு, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அருளரசு உள்பட பலர் கலந்து கொண்டனர்.



➡ ஈரோட்டில் அரசு நிகழ்ச்சியில் பங்கேற்க வந்திருந்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், விபத்தில் காயமடைந்து அறுவைச் சிகிச்சை மேற்கொண்டுள்ள ஈரோடு கிளாம்பாடி பகுதி திமுக இளைஞரணி அமைப்பாளர் கே.தர்மராஜுக்கு ரூ.1 லட்சமும், ஈரோடு கோட்டை பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.நடராஜ், சிறுநீரக பாதிப்பு சிகிச்சை பெறுவதற்காக ரூ.50 ஆயிரமும் மருத்துவ உதவித்தொகையாக வழங்கினார். இதற்கான ஏற்பாட்டை திமுக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் செய்திருந்தார். இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### மத்திய அரசை கண்டித்து

# இண்டியா கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம்

● **ஈரோடு/நாமக்கல்**

மத்திய அரசைக் கண்டித்து இண்டியா கூட்டணியின் சார்பில் ஈரோட்டில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது.

எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களை மத்திய அரசு தொடர்ந்து புறக் கணித்தல், சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக் களுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் அளிக்காமல் இருத்தல், கூட்டாட்சி தத்துவத்தை சிதைக்கும் வகையிலான மத்திய அரசின் செயல்பாடுகளைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் அடங்கிய இண்டியா கூட்டணி சார்பில் ஈரோடு சூரம்பட்டி நான்குமுனை சந்திப்பு பகுதியில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் ரகுராமன் தலைமை வகித்தார். ஈரோடு கிழக்கு தொகுதி எம்எல்ஏவும், காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் மாநில தலைவருமான ஈவிகேஎஸ் இளங்கோவன் கண்டன உரையாற்றினார்.





↑ மத்திய அரசைக் கண்டித்து நாமக்கல் பூங்கா சாலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், ஈரோடு மாநகர காங்கிரஸ் பொறுப்பாளர் திருச்செல்வம், முன்னாள் மாவட்ட தலைவர்கள் ஈ.பி.ரவி, ராஜேந்திரன், துணைத்தலைவர் ராஜேஷ் ராஜப்பா, இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் பிரபாகரன், திராவிடர் கழக அமைப்பு செயலாளர் சண்முகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**நாமக்கல்லில் ஆர்ப்பாட்டம்**

நாமக்கல் பூங்கா சாலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் கந்தசாமி தலைமை வகித்தார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் சித்திக், காங்கிரஸ் முன்னாள் மாநில மாணவரணி தலைவர் பாலாஜி, எலச்சிபாளையம் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் தங்கவேலு உள்ளிட்ட கூட்டணிக் கட்சியினர் பலர் கலந்து கொண்டனர்.

## பனைமடல் கிராமத்தில் பெண் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

● **சேலம்**

பெத்தநாயக்கன்பாளையத்தை அடுத்த பனைமடல் கிராமத்தில், 'மகளிர் சிறுதானிய விவசாயக் குழு' என்ற தலைப்பில் வேளாண் துறை அட்மா திட்டத்தின் கீழ் பெண் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

அட்மா குழு உறுப்பினர் சிங்காரவேலு தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குநர் வேல்முருகன் முன்னிலை வகித்து, கலைஞர் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம், வேளாண் துறை சார்ந்த திட்டங்கள் ஆகியவை குறித்து பேசினார்.

மேலும், ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய இணைப் பேராசிரியர் இளங்கவி, தோட்டக்கலை அலுவலர் ஸ்ரீதேவி, கால்நடை உதவி மருத்துவர் மணிகண்டன், உதவி வேளாண்மை அலுவலர் கார்த்தி, வனத்துறை அலுவலர் அசோக்குமார் ஆகியோர் பேசினர்.

ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் கோகுலப்பிரியா, உதவி தொழில்நுட்ப மேலாளர் ராஜ்குமார் செய்திருந்தனர்.

வருந்துகிறோம்!
இரங்கல்
ஆண்டு நினைவு நாள்
35-ம் ஆண்டு நினைவு நாள்

திரு. T.A.L.C.L. ஆறுமுகசாமி நாடார்
தென்காசி
தங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்

### வநேத்ரா முத்தாயம்மாள் கல்லூரி சார்பில்

# 'நிகரில்லா நாமக்கல்' என்ற தலைப்பில் போட்டி

● **நாமக்கல்**

ராசிபுரம் வநேத்ரா முத்தாயம்மாள் கல்வி நிறுவனம் சார்பில் 30-ம் ஆண்டு விழாவினை தொடர்ந்து 'நிகரில்லா நாமக்கல்' என்ற தலைப்பில் பொதுமக்கள், இளைஞர்கள் பங்கேற்கும் வகையில் பல்வேறு போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான லோகோ வெளியீட்டு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் செயலர் இயக்குநர் சி.மஞ்சுமுத்துவேல் தலைமை வகித்தார். கல்வியியல் கல்லூரி முதல்வர் மருதை வரவேற்றார். இயக்குநர் முனைவர் (கல்வி) ரா.செல்வகுமரன், முதல்வர் எஸ்.விஜயகுமார், துணை முதல்வர் ஏ.ஸ்டெல்லாபேபி, புலமுதன்மையர் எம்.என்.பெரியசாமி, பாலிடெக்னிக் முதல்வர் ஆர்.மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து செயல் இயக்குநர் சி.மஞ்சு முத்துவேல் நிகரில்லா நாமக்கல் நிகழ்விற்கான லோகோவை வெளியிட்டு தெரிவித்ததாவது:

வநேத்ரா முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியின் 30-வது ஆண்டு தொடக்க விழாவை தொடர்ந்து நாமக்கல்லின் பெருமைகளை போற்றும் வகையில் 'நிகரில்லா நாமக்கல்' என்ற தலைப்பில் பல்வேறு போட்டிகள் நடைபெறும். கோலப் போட்டிகள், புகைப்படம் எடுத்தல், காணொலி பதிவு, விநாடி வினா போன்ற போட்டிகள் நாளை (10-ம் தேதி) தொடங்கி வரும் 21-ம் தேதி வரை நடைபெறும்.

இதில் பங்கேற்கும் பொது மக்கள், பெண்கள், இளைஞர்கள், மாணவ, மாணவியர் போட்டிக்கான வலைதளம் www.nigarillanamakkal.com மற்றும் 94422 22317 என்ற செல்போன் வாட்ஸ்அப் மூலம், வரைந்த கோலங்கள், புகைப்படங்கள், காணொலி பதிவுகள், பூர்த்தி செய்யப்பட்ட விநாடி வினா போன்றவற்றை அனுப்பலாம். இப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு மார்ச் 2-ல் நடைபெறும் விழாவில் ரூ.3 லட்சம் மதிப்பில் ரொக்கப்பரிசு, சான்றிதழ்கள் வழங்கப்படும். நாமக்கல் மாவட்டத்தின் மண் பெருமையை உலகம் முழுவதும் கொண்டு சேர்ப்பது போட்டியின் நோக்கம் என சி.மஞ்சுமுத்துவேல் கூறினார்.

rakeshh.sridhar@hindutamil.co.in





➡ ராசிபுரம் வநேத்ரா முத்தாயம்மாள் கல்வி நிறுவனம் சார்பில் 30-ம் ஆண்டு விழாவில் 'நிகரில்லா நாமக்கல்' என்ற தலைப்பிலான போட்டி லோகோ வெளியிடப்பட்டது



**UJJIVAN SMALL FINANCE BANK**

**பதிவு அலுவலகம்:** கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
**கிளை அலுவலகம்:** 116,117 வார்டு A, ப்ளாக் 5, எண்.642, பழைய SF.எண்.179/2 TSN எண்.115, Dr. ஜாகீர் உசேன் சாலை, ராசிபுரம், தமிழ்நாடு-637408

**இ-ஏல விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.**

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

| கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர் | (i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி | 17.01.2024 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை | குறைந்தபட்ச கேட்பு விலை | டேவணித்தொகை (EMD) |
|---|---|---|---|---|
| 1650210170000002<br>1.M.சரவணன்<br>2.பத்மினி சரவணன் | (I) 24.10.2019<br>(ii) 24.10.2019 அன்றுள்ளபடி<br>₹ 20,22,756/- (ரூபாய் இருபது லட்சத்து இருபத்திரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்தாறு மட்டும்)<br>(ii) 27.12.2019 | ₹ 40,89,182/- (ரூபாய் நாற்பது லட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து நூற்று எண்பத்து இரண்டு மட்டும்) | ₹ 28,00,000/- (ரூபாய் இருபத்தெட்டு லட்சம் மட்டும்) | ₹ 2,80,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) |

**சொத்துக்கள் விவரம்: ஐட்டம் எண்.1:** நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம் மற்றும் பிள்ளநல்லூர் டவுண் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட சர்வே எண்.85/1A, **வார்டு-11, 85-R.கொமரபாளையம் மேட்டு தெரு, பிள்ளநல்லூர் கிராமம், என்னும் முகவரியில் 1631 ¼ சதுர அடி நிலம் மற்றும் அதனுடன் 113.0 சதுர மீட்டர் RCC மாடி கட்டிடம்,** அதனுடன் அனைத்து பொருத்துதல்கள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கரட்டுகாட்டு செல்வம்-க்கு சொந்தமான விவசாய நிலத்திற்கு கிழக்கு, திருநாவுக்கரசு, சங்கீதா-க்கு சொந்தமான மனை நிலத்திற்கு மேற்கு, அனுசுயா, அண்ணாமலை-க்கு சொந்தமான நிலத்திற்கு வடக்கு, **ஐட்டம் எண்.1-ல் உள்ள பொது வழிப்பாதைக்கு தெற்கு மேற்குறிப்பிட்டுள்ள எல்லைகளின் பரப்பு 1631 ¼ சதுர அடி நிலம் மற்றும் அதனுடன் 1220 சதுர அடி RCC மாடி கட்டிடம்.** நத்தம் நில வரி திட்டத்தின் படி தற்போதைய சர்வே எண்.85/13-ன் பரப்பு 0.0298.0 சதுர மீட்டர் அதனுடன் தீர்வை ரூ.3.00.

**ஐட்டம் எண்.2:** பிள்ளநல்லூர் கிராமம், சர்வே எண்.85/1, புஞ்சை ஏக்கர் 1.63 தீர்வை ரூ.3.67 பாகம் பிரிக்கப்பட்ட சர்வே எண்.85/1A படி **மொத்தமுள்ள 213 ½ சதுர அடியில் பாதி பங்கு 106 ¾ சதுர அடி வழிப்பாதை.** எல்லைகள்: கரட்டுகாட்டு செல்வம்-க்கு சொந்தமான விவசாய நிலத்திற்கு கிழக்கு, திருநாவுக்கரசு, சங்கீதா-க்கு சொந்தமான மனை நிலத்திற்கு மேற்கு, அனுசுயா, ஐட்டம் 1, ஷெட்யூல் A சொத்திற்கு வடக்கு, ஷெட்யூல் B, ஐட்டம் எண்.1-ல் உள்ள சொத்து மற்றும் 15 அடி கிழக்கு மேற்கு வீதிக்கு தெற்கு. மேற்குறிப்பிட்டுள்ள எல்லையின் **தாக்கு 1:** கிழக்கு மேற்காக இரு பக்கமும் 30 அடி, வடக்கு தெற்காக இரு பக்கமும் 2 அடி மொத்தம் 60 அடி வடக்கு பக்கத்தில் உள்ள தாக்கு 1. **தாக்கு 2:** கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 2 ¾ அடி, தெற்கு பக்கம் 3 ¾ அடி வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 48 அடி, மேற்கு பக்கம் 46 ½ அடி மொத்தம் 153 ½ சதுர அடி. தாக்கு 1 மற்றும் தாக்கு 2 மொத்தம் 213 ½ சதுர அடி இதில் பாதி பங்கு 106 ¾ சதுர அடி வடக்கு தெற்கு மற்றும் கிழக்கு மேற்கு வழிப்பாதை. அதனுடன் அனைத்து வழிப்பாதை உரிமைகள் மற்றும் அனுமந்த உரிமைகள். மேற்குறிப்பிட்ட சொத்தானது பிள்ளநல்லூர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்கு உட்பட்டது.

**இ-ஏல தேதி மற்றும் நேரம் : 15.03.2024 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை**

| விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: | சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் |
|---|---|
| 14.03.2024 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை | 13.03.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை |

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
**Mr.G.நடராஜன்: 95512 77444, Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன்: 94455 08743 & Mr.R.புஷ்பகாந்த்: 98431 14222**

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Vinod Chauhan Mob.No. 98138 87931**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

**தேதி: 09.02.2024**
**இடம்: பெங்களூரு**

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்


### மேட்டூர் அருகே மாதநாயக்கன்பட்டியில்

# 17-ம் நூற்றாண்டு சூலக்கல் கண்டுபிடிப்பு

✍ த.சக்திவேல்

● **மேட்டூர்**

மேட்டூர் அருகே மாதநாயக்கன் பட்டியில் 17-ம் நூற்றாண்டை சேர்ந்த நாயக்கர் கால சூலக்கல் கண்டறியப்பட்டுள்ளது.

மேட்டூரை அடுத்த மேச்சேரி அருகே மாதநாயக்கன்பட்டியில் பெருந்தலைவர் காமராசர் நினைவு அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் தொன்மை பாதுகாப்பு மன்றம் உள்ளது. இந்த மன்றத்தின் தலைவராக தலைமை ஆசிரியர் சந்திரசேகரன், செயலாளராக ஆசிரியர் அன்பரசி, மன்ற உறுப்பினராக பள்ளி மாணவர்கள் உள்ளனர்.

களப்பயணம் மேற்கொண்ட தொன்மை பாதுகாப்பு மன்ற உறுப்பினர்கள், மாணவர்கள் கொடுத்த தகவல்படி, பள்ளியின் அருகில் உள்ள காட்டில் பழமையான கல்லை ஆய்வு செய்தனர். அது, 17-ம் நூற்றாண்டை சேர்ந்த நாயக்கர் கால சூலக்கல் என கண்டறியப்பட்டது.

இதுகுறித்து பள்ளியின் தொன்மை பாதுகாப்பு மன்ற செயலாளர் அன்பரசி கூறியதாவது:

பள்ளி மாணவர்களுடன் கள ஆய்வு செய்த போது, 17-ம் நூற்றாண்டை சேர்ந்த நாயக்கர் கால சூலக்கல் என்பது தெரியவந்தது.

இந்த சூலக்கல் 3 அடி உயரம் 1 அடி அகலம் கொண்ட வெள்ளை கல்லால் ஆனது. இந்த கல்லின் நடுவில் திரிசூலம் போன்ற அமைப்பும், அதன் இருபுறமும் சூரியன், சந்திரன் போன்ற அமைப்பும் உள்ளது.

கோயிலுக்கோ அல்லது வேறு எதற்காவது தானம் கொடுத்ததற்காக வைக்கப்பட்டது தான் இந்த சூலக்கல். இதன் பொருள் சூரியன், சந்திரன் உள்ளவரை இந்த தானம் நிலைத்து இருக்கும் என்பதாகும்.

இதில் திரிசூலம் போன்ற அமைப்பு இருப்பது நாயக்கர் காலத்தை குறிப்பதாகும்.

இது போன்ற நடுகற்கள், கல்வெட்டுகள், தொல்லியல் எச்சங்கள் வரலாற்றை அறிய உதவும் ஆவணம். இது போன்றவற்றை பாதுகாக்கவும், மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தொன்மை பாதுகாப்பு மன்றம் பள்ளிகளில் செயல்படுகிறது, என்றார்.



↑ மேச்சேரி அருகே 17-ம் நூற்றாண்டை சேர்ந்த நாயக்கர் கால சூலக்கல்லை ஆய்வு செய்த ஆசிரியர் மற்றும் மாணவர்கள்.

இந்து தமிழ் திசை
**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.
படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by M. Jegadesh Kumar at Survey Nos. 391/1 Part & 391/2, Kamaraj Road, Uppilipalayam Village, Coimbatore-641015 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

CB-SM